# Court of the District Munsif cum Judicial Magistrate No.I, Usilampatti.

| | | | | |
|---|---|---|---|---|
| **Case No.** | : | **CC .74/2016** | | |
| **PW/DW/CW** | : | **PW4** | | |
| **Name** | : சுப்பரமணியன் | | **Caste** | : |
| **Father's/ Husband's Name** | : | | **Calling** | : |
| **Village** | : | | **Religion** | : |
| **Taluk** | : | | **Age** | : |

( Accused absent, petition filed and allowed)

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 02.09.2024

---

**முதல் விசாரணை:**

நான் தற்போது பணி நிறைவு பெற்றுள்ளேன். நான் போடியில் வசித்து வருகிறேன். எனக்கு சார்பு ஆய்வாளர் கமர்நிஷா அவர்களையும் அவரது கையொப்பத்தையும் நன்கு தெரியும். கடந்த 16.02.2016ம் தேதி இரவு 21.00 மணியளவில் உசிலம்பட்டி தாலுகா நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் கமர்நிஷா அவர்கள் லட்சுமி என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று நிலைய குற்ற எண் 35/2016 பிரிவுகள் 279,304Aஇதசவாக வழக்கை பதிவு செய்துள்ளார். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2ஆக குறியீடு செய்யப்படுகிறது**. 17.02.2016ம் தேதி சார்பு ஆய்வாளர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு காலை 6.30 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் செந்தில், பெத்தான் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **அந்த பார்வை மகசர் அ.சா.ஆ 3 மற்றும் மாதிரி வரைபடம் அ.சா.4ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

2. அன்றைய தினமே சாட்சிகள் லட்சுமி, தங்கப்பாண்டி, கருப்பையா, பாண்டியராஜன், நடராஜன், முத்துகருப்பாயி, முருகன் ஆகியோர்களையும் மகசர் சாட்சிகளையும் தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். . பின்னர் அன்றைய தினம் காலை 8.30 மணி முதல் 10.30 மணி வரை விபத்தில் இறந்துபோன கருப்பையா என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார் முன்னிலையில் உசிலம்பட்டி அரசு மருத்துவமனை சவகிடங்கில் வைத்து பிரேத விசாரணை மேற்கொண்டு அறிக்கை தயார் செய்துள்ளார். **அந்த பிரேத**

**விசாரணை அறிக்கை அ.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.பின்னர் வழக்கை மேல்விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்ததை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 18.02.2016ம்தேதி எதிரியை 12.00 மணியளவில் காவல்நிலையம் முன்பு வைத்து கைது செய்து நிலைய ஜாமீனில் விடுவித்தேன். பின்னர் பணி மாறுதலில் சென்றபடியால் வழக்கை ஆய்வாளர் திரு. விநாயகம் அவர்கள் மேல்விசாரணைக்காக வைத்ததை அவர் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 05.03.2016ம் தேதி விபத்து ஏற்படுத்திய வாகனமான KL 37 B 9317 மாருதி சுசிக்கி காரையும் விபத்துக்குள்ளான வாகனமான TN 58 AY 8584 டிவிஎஸ் ஸ்போர்ட் இருசக்கர வாகனத்தையும் ஆய்வுக்கு உட்படுத்தி அறிக்கை வழங்கிய திரு.சக்திவேல் மற்றும் திரு. முக்கன் மோட்டார் வாகன ஆய்வாளர்களை அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அறிக்கைகளை பெற்றுள்ளார். **அந்த மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் முறையே அ.சா.ஆ6மெற்றும் அ.சா.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அன்றைய தினம் பிரேதத்தை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனைக்கு உட்படுத்திய காவலர் செல்லத்துரை என்பவரை விசாரித்து அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். பின்னர் முதல்தகவல் அறிக்கை பதிவு செய்த சார்பு ஆய்வாளர் கமர்நிஷா விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3.பின்னர் பிரேத பரிசோதனை செய்த உசிலம்பட்டி அரசுமருத்துவமனை மருத்துவர் வினோலியா அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்து அறிக்கை பெற்றேன். **அந்த பிரேத பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ 8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. இறுதியாக எதிரி வாகனத்தின் கவனக்குறைவால் விபத்து ஏற்பட்டுள்ளது என தெரியவந்ததால் எதிரி மீது மேற்சொன்ன பிரிவுகளின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை** :

4. புகார்தாரரும், அ.சா 2 சாட்சி கேள்விப்பட்ட சாட்சிகள் என்றால் சரிதான். சம்பவ இடம் கணவாயில் இருந்து கீழே S ஸ்பேன்ட் வளைவை தாண்டி இறங்கும்போது விபத்து நடந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அ.சா.3, 4 சாட்சிகள் மதுரை கிருஷ்ணா தோட்டத்தில் வேலை செய்து வருவதாக வாக்குமூலத்தில் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். அடிப்பட்டவரை ஓடிசென்று பார்த்தபோது அவரை தூக்கி அவர் பையில் இருந்த அலைபேசி மூலமாக அ.சா.2 தகவல் சொன்னோம் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். விபத்துக்குள்ளானவர் அவருடைய ஓட்டுநர் உரிமத்தை சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்திற்கு வடக்கு தெற்கு பக்கத்தில் எந்த குடியிருப்பும் இல்லை

என்றால் சரிதான். இழப்பீடு பெறுவதற்காக கொடுக்கப்பட்ட புகாரை அப்படியே பதிவு செய்து ஆவணத்தை நிலையத்திலேயே தயார் செய்து ஒருதலைபட்சமாக எதிரி மீது குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

S.d./Subramani
Taken down be me in open court
Read over to the witness in the
presence of accused and admitted
by HIM correct.
/Sd.. S.Maharajan
District Munsif cum Judicial Magistrate No.I,
Usilampatti.